**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar | |
| Miscellaneous | CC.No. 560/2019 |
| Preliminary register | |
| Sessions | |
| Deposition Of Witness for | Prosecution PW 3<br>Defense<br>Court |
| Name | திரு. ஆதிமூலம் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2026 |

*எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.*

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27th day of February 2026.

நான் தற்போது மூலைக்கரைப்பட்டி காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 21.08.2019 ஆம் தேதி 20.00 மணிக்கு முதல்நிலை காவலர் நம்பிராஜன் என்பவர் நிலையபொறுப்பில் இருக்கும் போது செண்பகராமநல்லூர் அம்மன் கோவில் தெருவை சேர்ந்த முத்துஆசாரி மகன் பாலகிருஷ்ணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைகேற்ப குற்ற எண். 161/2019 இதச பிரிவுகள் 294(பி), 352, 506(2) என்ற வழக்கை பதிவு செய்தார். அந்த புகார் மனு **<u>அ.சா.ஆ.2</u>** ஆகும். முதல் தகவலறிக்கை **<u>அ.சா.ஆ.3</u>** ஆகும்.

புகார் மனுவை அசல் தகவலறிக்கையுடன் இணைத்து கனம் நான்குநேரி நீதிமன்றம் அனுப்பியும் சம்மந்தப்பட்ட நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், விசாரணை நகலை உதவி ஆய்வாளர் துரை அவர்கள் பார்வைக்கு வைத்தார். அவர் விசாரணை நகலை எடுத்துகொண்டு 21.08.2019 ஆம் தேதி 21.00 மணிக்கு சம்பவ இடம்

சென்று சம்பவ இடத்தையும் அதன் சுற்றுபுறங்களையும் சாட்சிகள் அருணாச்சலம், நம்பிராஜா ஆகியோர்கள் முன்னிலையில் டார்ச்லைட் வெளிச்சத்தில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தார். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.4** ஆகும். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.5** ஆகும்.

சாட்சிகள் பாலகிருஷ்ணன், மகாலெட்சுமி, கல்யாணி, சண்முகம், நம்பிராஜன் ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களுடைய வாக்குமூலங்களை பதிவு செய்தார்.

21.08.2019 ஆம் தேதி 23.00 மணிக்கு எதிரியை அம்பலம் பஸ்ஸ்டாப்பில் வைத்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தார்.

புகார் மனுவின் அடிப்படையில் புலன் விசாரணையிலும் எதிரி குற்றபுரிந்தது உண்மை என தெரியவந்ததால் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 352, 506(2) ன் படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து தயார் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. புகார்தாரரிடம் எழுதாத வெள்ளைதாளில் கையெழுத்து வாங்கிக்கொண்டு புகார் என்னால் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. சொன்ன நாள், இடம், விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வழக்கை சரிவர புலன்விசாரணை செய்யாமல் எதிரி மீது வழக்கு தாக்கல் செய்து குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN
Date: 2026.02.27 15:18:28 +0530

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 560/2019 |
| Deposition Of Witness for | Prosecution PW 2<br>Defense<br>Court |
| Name | திருமதி. மகாலெட்சுமி |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2026 |

எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27th day of February 2026.

நான் செண்பகராமநல்லூரில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர். எதிரியை தெரியும். என்னுடைய ஊர்க்காரர். எதிரியுடன் சமாதானமாக செல்கிறேன். வழக்கு பற்றி எதுவும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

கடந்த 21.08.2019 ஆம் தேதி மாலை சுமார் 07.00 மணியளவில் நீங்களும், உங்களது கணவரும் வீட்டின் முன்பு நின்றுகொண்டிருந்தபோது எதிரி பைக்கில் வேகமாக சென்றபோது மெதுவாக செல்லாம் என சொன்னதாகவும், அதற்கு எதிரி அ.சா.1 யை தகாத வார்த்தையால் பேசி, அ.சா.1 ன் கன்னத்தில் அடித்து கீழே தள்ளி, கீழே கிடந்த கல்லை கொண்டு கொன்றுவிடுவேன் என கொலைமிரட்டல் விடுத்ததாக போலிசாரிடம் விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் எதிரி

ஊர்க்காரர் என்பதால் உண்மைக்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

BOOMINATHAN
Digitally signed by BOOMINATHAN
Date: 2026.02.27 15:18:34 +0530

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 560/2019 |
| Deposition Of Witness for | Prosecution PW 1<br>Defense<br>Court |
| Name | திரு. பாலகிருஷ்ணன் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2026 |

எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27th day of February 2026.

நான் செண்பகராமநல்லூரில் வசித்து வருகிறேன். கொத்தனார் வேலை பார்த்து வருகிறேன். எதிரியை தெரியும். என்னுடைய ஊர்க்காரர். காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெப்பம் என்னுடையது தான் அது **அ.சா.ஆ.1** ஆகும். வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை. எதிரியுடன் சமாதானமாக செல்கிறேன். வழக்கு பற்றி எதுவும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

எதிரியுடன் சமாதானமாக செல்வதாக மனுதாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். கடந்த 21.08.2019 ஆம் தேதி மாலை சுமார் 07.00 மணியளவில் நீங்களும், உங்களது மனைவியும் வீட்டின் முன்பு நின்றுகொண்டிருந்தபோது எதிரி பைக்கில் வேகமாக சென்றபோது மெதுவாக செல்லாம் என சொன்னதாகவும், அதற்கு எதிரி உங்களை

தகாத வார்த்தையால் பேசி, உங்களது கன்னத்தில் அடித்து கீழே தள்ளி, கீழே கிடந்த கல்லை கொண்டு கொன்றுவிடுவேன் என கொலைமிரட்டல் விடுத்ததாக போலிசாரிடம் புகார் மனு அளித்துவிட்டு, விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் எதிரி ஊர்க்காரர் என்பதாலும் அவருடன் சமரசமாக செல்வதாலும் உண்மைக்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.02.27 15:18:40 +0530